**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**<u>Crlmp. No.311/2026</u>**

| Deposition of Name | அமிர்தம் | Prosecution | LW-3 PW-3 |
|---|---|---|---|
| Father Name | பேச்சிமுத்து | Court | JM Court, Sirkali |
| Village | கூத்தியம்பேட்டை | Taluk | Sirkali |
| District | மயிலாடுதுறை | Age | 38/2026 |

Solemnly affirmed by Tmt. R. கீதா., Grade III Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**<u>17.04.2026.</u>**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் கட்டிட வேலை செய்து வருகிறேன். நான் இருக்கும் தெருவில் தான் தினேஷ், சிரஞ்சீவி ஆகிய இருவரும் இருந்தார்கள். சிரஞ்சீவி என்பவர் என்னுடன் வேலை செய்தவர் தான் அவரை எனக்கு சிறு வயது முதலே தெரியும். சிரஞ்சீவி காணாமல் போன முதல் நாள் சீர்காழி சர்ச் க்கு சென்றுவிட்டேன். மறுநாள் காலையில் நான் வீடு வந்து பார்த்த போது அவர் இல்லை. தெருவில் பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை. தினேசின் அம்மா ஆற்றில் போய் நன்றாக தேடுங்கள் என்றும் ஒயின்ஷாப் பக்கம் நன்றாக தேடுங்கள் என்று சொல்லி தெருவில் அழுதார். என் மனைவி அதனை கேட்டு என்னிடம் கூறினார். அன்று தினேஷ் என்பரும் பக்கத்தில் இருந்தார் வெளியில் எங்கும் செல்லவில்லை. அதன் பிறகு நானும் தினேசும் தான் ஆற்றில் தேடினோம். அப்போது ஆற்றில் சிரஞ்சீவியின் உடல் கிடந்தது. அப்போது அந்த சடலத்தை கண்டதும் தினேஷ் தவறு செய்துவிட்டேன் என்று ஆற்றில் இருந்து இறங்கி ஓடினார். அதன் பிறகு ஊரில் உள்ளவர்களிடம் தெரிவித்து விட்டு போலிசில் புகார் கொடுத்தோம்.

போலிசார் வந்து சடலத்தை கைப்பற்றி சீர்காழி GHக்கு அனுப்பி வைத்தார்கள். பிரேத பரிசோதனை முடிந்து சடலத்தை வீட்டிற்கு கொண்டுவந்தார்கள். அடக்க காரியம் முடிந்தது. அதன் பிறகு புதுப்பட்டினம் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தனர். போலிசார் எங்களையும் அழைத்து விசாரித்தார்கள் நாங்கள் நடந்ததை கூறினோம். ஊர் முக்கியஸ்தர்கள் அனைவரும் சென்றோம். பின்பு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியரிடமும், மயிலாடுதுறை காவல் கண்காணிப்பாளர் அவர்களிடமும் புகார் கொடுத்தோம். விசாரணைக்கு எங்களை அழைத்தார்கள் நாங்கள் சென்று நடந்ததை கூறினோம். அதன் பிறகு நான் இந்நீதிமன்றத்தில் நடந்தவற்றை கூறுகிறேன். குற்றவாளி யார் என்பது பற்றி நாங்கள் தெரிந்து கொள்வதற்காக இவ்வளவு முயற்சிகள் செய்து வருகிறோம்.

<u>**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**</u>

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

<u>**Crlmp. No.311/2026**</u>

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | முத்துலட்சுமி | Prosecution | LW-4 PW-4 |
| Father Name | முத்தையன் | Court | JM Court, Sirkali |
| Village | கூத்தியம்பேட்டை | Taluk | Sirkali |
| District | மயிலாடுதுறை | Age | 48/2026 |

Solemnly affirmed by Tmt. R. கீதா., Grade III Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

<u>**17.04.2026.**</u>

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் விவசாய வேலை செய்து வருகிறேன். நாங்கள் சிரஞ்சீவியை இரவு 11.00 மணிக்கு தேடிக்கொண்டு சென்றோம். அன்றை தினமே தினேசுடன் சேர்ந்து தேடினோம். பிறகு தினேஷ் எங்களை விட்டு விட்டு சென்றுவிட்டார். பிறகு தினேஷ் தனியாக சென்று 12.00 மணிக்கு சென்றார். தினேஷ் வீடும் எங்கள் வீடும் பக்கம் பக்கம் தான். பிறகு தினேஷ் அவரது அம்மாவிடம் பேசினார். அதன் பிறகு தினேசின் அம்மா வந்து ஆற்றில் போய் தேடுங்கள் என்று கூறினார். அதன் பிறகு மறுநாள் மதியம் ஆற்றில் போய் தேடினோம் தினேசும் உடன் தேடினார். இந்த சம்பவத்திற்கு தினேஷ் தான் காரணம். அவரை தவிர யாரும் இல்லை.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Crlmp. No.311/2026**

| Deposition of Name | குமாரி | Prosecution | LW-5 PW-5 |
|---|---|---|---|
| Father Name | கர்ணன் | Court | JM Court, Sirkali |
| Village | கூத்தியம்பேட்டை | Taluk | Sirkali |
| District | மயிலாடுதுறை | Age | 60/2026 |

Solemnly affirmed by Tmt. R. கீதா., Grade III Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**17.04.2026.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் விவசாய வேலை செய்து வருகிறேன். நான் சிரஞ்சீவியின் அம்மா ஆவேன். தினேஷ் அவர் மனைவியிடம் போன் செய்து சிரஞ்சீவி எழுத்திருக்க முடியாமல் போதையில் உள்ளதாக கூறினார். இந்த விபரத்தை சிரஞ்சீவி மனைவியிடம் கூறுமாறு தினேஷ் சொன்னார். அதன் பிறகு தினேசின் மனைவி போனை பவாணியிடம் கொடுத்து பேசினார். அப்போது சிரஞ்சீவியை அழைத்து கொண்டு வண்டியை எடுத்து வருமாறு சிரஞ்சீவியின் மனைவி தினேசிடம் கூறினார். ஆனால் தினேஷ் வண்டியை வேகமாக எடுத்து வந்தார். நான் உடனே அண்ணன் எங்கடா என்று கேட்டேன். அதற்கு அவர் அண்ணன் லிப்ட் கேட்டுசென்று இருப்பார் என்று சொன்னார். தினேஷ் அவரது அம்மாவிடம் பேசினார். பிறகு அங்கிருந்த அனைவரும் தினேசிடம் சிரஞ்சீவி எங்கடா என்று வற்புறுத்தி கேட்டோம். தினேசின் அம்மா மற்றும் அப்பா ஆகியோர்கள் தினேசை திட்டினார்கள். நாங்கள் சிரஞ்சீவியை தேடிக்கொண்டே சென்றோம் அப்போது எங்கள் உடனேயே தினேசும் வந்தார். போகும் இடமெல்லாம் தடை செய்து வாக்குவாதம் செய்தார். மறுநாள் தினேசின் அம்மா ஆற்றில் சென்று பாருங்கள் என்று அழுது கொண்டே இருந்தார்.

அதன் பிறகு காவல் நிலையத்திற்கு செல்ல தயாரானோம். பின்பு மாலை 3.00 மணிக்கு ஆற்றில் சென்று பார்த்த போது சிரஞ்சீவியின் சடலத்தை தினேஷ் தான் கண்டு பிடித்தார். வடக்கு தெருவினை சேர்ந்த ரஜேந்திரன் மகன் ராஜா என்பவர் தினேசை பார்த்து நீங்கள் இருவரும் தானே சண்டையிட்டீற்கள் நான் தானே விலக்கி விட்டேன் என்று கூறினார். நீதான் அடித்து கொன்றுவிட்டாய் என்று தினேசை பார்த்து சொன்னார். அதற்கு ராஜா வை தினேஷ் அறைந்து நான் கொன்றதை நீ பார்த்தாயா என்று சண்டையிட்டார். தினேசின் அம்மா டாக்டரிடம் போதையில் சிரஞ்சீவி தடுமாறி விழுந்து இறந்து விட்டதாக கூறினார். ஆற்றில் இருந்து மீட்கப்பட்ட சிரஞ்சீவியின் சடலத்தில் தலை, மணிக்கட்டு மற்றும் கழத்து பகுதிகளில் காயம் இருந்தது. அதற்கான புகைப்படங்கள் எங்களிடம் உள்ளது. வனத்துறையை சேர்ந்து பாபு என்பவர் தினேஷ் தான் குற்றவாளி அவர் தான் சடலத்தை துாக்கினார் என்று கூறினார் ஆனால் சாட்சி கூற வரமாட்டேன் என்று கூறிவிட்டார்.

சடலம் கிடந்த ஆற்றுபகுதிக்கு அருகில் உள்ள கொப்பியத்தை சேர்த்த கணேசன் என்பவர் தினேஷ், அடையாளம் தெரியாத வழுக்கை தலையுடன் கொண்ட ஒரு நபர் மற்றும் ஒரு பெண் ஆகியோர் சிரஞ்சீவியின் சடலத்தை துாக்கி ஆற்றில் போட்டார்கள் என்று கூறினார். அப்போது பாக்கெட்டில் இருந்த 50 ரூபாயை எடுத்து நாணல் செடியில் போட்டார்கள் என்று கூறினார். மேற்படி தகவல்களை புதுப்பட்டினம் காவல் நிலையத்தில் கூறினோம். ஆற்றங்கரை ஓரம் இரத்த கறை படித்த தினேசின் சட்டை கிடந்தது. அந்த சட்டையை கையால் தொடாமல் குச்சினால் எடுத்து ஒரு கவரில் போட்டு புதுப்பட்டினம் போலிசாரிடம் ஒப்படைத்தோம்.

சடலத்தை அடக்கம் செய்த ஒரு வாரம் கழித்து போலிசார் எங்கள் ஊருக்கு வண்டியில் வந்தார். அப்போது தினேசின் அம்மா அவரை வழிமறித்து ஒரு போனை கொடுத்து வக்கீல் பேசுகிறார் என்று கூறி போலிசாரிடம் கொடுத்தார். அதன் பிறகு போலிஸ் சிரஞ்சீவி வீட்டிற்கு வராமல் திரும்பிவிட்டார். நான் நடந்தவற்றை நேரடியாக பார்த்தேன்.

போலிசார் எந்த விசாரணையும் செய்யவில்லை . எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாவட்ட ஆட்சியர் மயிலாடுதுறை மற்றும் காவல் கண்காணிப்பாளர் மயிலாடுதுறை க்கு புகார் கொடுத்தோம். பிறகு போலிசார் கண்துடைப்புகாக வந்து விசாரிப்பார்கள். பிறகு கண்டுகொள்ளமாட்டார்கள். தினேசின் அம்மா தனலெட்சுமி மாடியில் நின்று கொண்டு எங்களிடம் சண்டை போட்டார். உங்களால் நாங்கள் 5 லட்சம் செலவு செய்துள்ளோம். உங்களால் எங்களை ஒன்று செய்ய முடியாது என்று கூறினார். அப்போது சண்டை கைகலப்பாக மாறி என்னை அடிக்க வந்ததோடு அவர் தானாகவே ஜாக்கெட்டை கிழித்துக்கொண்டு பொய்புகார் ஆணைக்காரன் சத்திரம் காவல்நிலையத்தில் கொடுத்தார்.

பிறகு ஆணைக்காரன் சத்திரம் போலிசார் எங்களை விசாரித்தார்கள். அவர்கள் சமாதானமாக செல்லுங்கள் கோர்ட்டில் பார்த்துக்கொள்ளுங்கள் என்று கூறினார்கள். பிறகு இந்த சம்பவம் நடந்து 3 நாட்கள் கழித்து தினேசின் அம்மா தானாகவே ஜாக்கெட்டை கிழித்துக்கொண்டு ஆம்புலன்சுக்கு போன் செய்து வரவழைத்து அவர் மருத்துவமனைக்கு செல்ல முற்பட்டார். ஆம்புலன்ஸ் ஊழியர்கள் ஏன் எங்களை வரவழைத்தீர்கள் நீங்கள் நன்றாக தானே உள்ளீர்கள் என்று தினேசின் அம்மாவிடம் கூறினார்கள். பிறகு ஆம்புலன்ஸ் தலைமை அலுவலகத்திற்கு போன் செய்து என்னை அழைத்து செல்ல ஊழியர்கள் மறுக்கிறார்கள் என்று கூறியதால் ஆம்புலன்ஸ் ஊழியர்களின் மேலதிகாரிகளின் உத்தரவுப்படி சீர்காழி GHக்கு அழைத்து சென்றார்கள்.

ஆணைக்காரன் சத்திரம் காவல் நிலையத்திற்கு புகார் கொடுத்தார். வாஞ்சிநாதன் என்ற போலிசார் எங்களிடம் விசாரித்து நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த வழக்கு பற்றி கோர்ட் முடிவு செய்யும் என்று கூறினார்கள். தினேசும் அம்மாவும் அவர் தனது வீட்டை விட்டு காலி செய்து சென்றுவிட்டார்கள். அவர் சென்று 1.5 வருட காலம் ஆகிறது. சென்ற மாதம் 28 ம் தேதி தினேஷ் எங்கள் வீட்டிற்கு வந்து அறுவாளை வைத்து உங்களை காலி செய்தால் வேலை முடிந்துவிடும் என்று மிரட்டினார். பிறகு ஊர்காரர் கள் வந்து தடுத்து பிடிக்க முற்பட்டார்கள்.

அதில் தடுமாறி தினேஷ் நெற்றியில் காயம் ஏற்பட்டது. அனைவரும் சேர்ந்து ஆணைக்காரன் சத்திரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். இரண்டு காவலர்கள் வந்து தினேசை அழைத்து சென்றார்கள். போலிசார் எந்த கைது நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவரை மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை அளித்தார்கள்.